★ விசேட பதிப்பு விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 மார்கழி 8 ரபி-அவ் 7 இதழ் 313

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23—12—82

## ஒரே பார்வையில் யாழ். மாவட்ட முடிவுகள்

**ஊர்காவற்றுறைத் தொகுதி**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 23,242 |
| விளக்கு | 1927 |
| பானை | 21,109 |
| கழிவு | 206 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 23,242 |

**வட்டுக்கோட்டைத் தொகுதி**

| | |
|---|---|
| மொத்தம் | 46,206 |
| விளக்கு | 2,156 |
| பானை | 24,397 |
| கழிவு | 114 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 26,667 |

**காங்கேசன்துறைத் தொகுதி**

| | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 51 6 |
| விளக்கு | 19 |
| பானை | 29 4 |
| கழிவு | 2 |

(4-ம் பக்கம் பார்க்க)



# பாராளுமன்ற பதவிக்கால நீடிப்புக்கு அங்கீகாரம் கிடைத்தது.

**மொத்த வாக்குகள்: 57,68,662**
**விளக்கு : 31,41,223**
**பானை : 26,05,983**

(கொழும்பு)

**நேற்று நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பில், பாராளுமன்றபொதுத் தேர்தலை ஒத்திவைக்கும் யோசனைக்கு அங்கீகாரம் கிடைத்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.**

22 மாவட்டங்களிலும் பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்காளர்கள் தொகை: 81 லட்சத்து 45 ஆயிரத்து 015 ஆகும். இதில், நேற்று நடைபெற்ற மக்கள் தீர்ப்பில் 57 லட்சத்து 68 ஆயிரத்து 662 பேர் வாக்களித்துள்ளனர். விளக்குக்கு மொத்தம் 31 லட்சத்து 41 ஆயிரத்து 223 வாக்குகளும் பானைக்கு 26 லட்சத்து 05 ஆயிரத்து 983 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

### 15 மாவட்டம் விளக்குக்கு

இருபத்தி இரண்டு மாவட்டங்களில் பதினைந்து மாவட்டங்களில் விளக்கு வெற்றி பெற்றுள்ளது. ஏழு இடங்களில் பானை வெற்றிபெற்றுள்ளது.

### ஜனாதிபதி தேர்தலுடன்

நேற்று நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பை, ஜனாதிபதி தேர்தலுடன்ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அரசுயோசனைக்கு வாக்குகள் குறைவாகவே கிடைத்திருக்கின்றன.

ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியகட்சிக்கு மொத்தம் 34 லட்சத்து 50 ஆயிரத்து 811 வாக்குகளும் எதிர்க்கட்சியினருக்கு 30 லட்சத்து 71 ஆயிரத்து 236 வாக்குகளும் கிடைத்திருந்தன.

### உடைக்கப்போய்....

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சந்தியில்கட்டித் தொங்க விடப்பட்டிருந்த பானை ஒன்றை ஒரு கட்சியின் ஆதரவாளர் அடித்து நொருக்கியபொழுது, அந்தப் பானைக்குள்ளிருந்த கழிவு எண்ணை அவரை அபிஷேகம் செய்ததாம். அவர் அந்த இடம்தெரியாமல் வந்த காருக்குள் ஏறிச் சென்றுவிட்டாராம். (மா)

### ★ யாழ் மாவட்டம்

| | |
|---|---|
| பானை | 2,65,534 |
| விளக்கு | 25,315 |
| பழுது | 1,775 |

(யாழ்ப்பாணம்)

சர்வஜன வாக்கெடுப்பில் யாழ். மாவட்டத்தில் பதினொரு தொகுதிகளிலும் மொத்தமாக பானைக்கு ஆதரவாக 2,65,534 வாக்குகளும், விளக்குக்கு ஆதரவாக 25,315 வாக்குகளும் கிடைத்துள்ளன.

பழுதடைந்த வாக்குகள் 1,775

யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டமொத்த வாக்குகள் 4,93,705

வாக்களித்தவர்களின் மொத்த வாக்குகள் 2,92,624. (மா)

## சர்வஜன வாக்கெடுப்பு-வாக்களிப்பு விபரம்

| மாவட்டங்கள் | மொத்த வாக்காளர் எண்ணிக்கை | விளக்கு | பானை | செல்லுபடியானவை | நிராகரிக்கபட்டவை | அளிக்கப் பட்ட மொத்த வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 கொழும்பு | 9,72,196 | 3,35179 | 2,95,631 | 630810 | 2192 | 6,03302 |
| 2. கம்பஹா | 8,35,265 | 3,30265 | 2,43,643 | 573908 | 1841 | 5,75,749 |
| 3 களுத்துறை | 4,99,215 | 1,70495 | 1,74,413 | 344908 | 1035 | 355943 |
| 4 கண்டி | 5,64767 | 265 986 | 1,60,349 | 4263 5 | 1572 | 427907 |
| 5. மாத்தளை | 1,87,276 | 110689 | 39 348 | 150037 | 630 | 150667 |
| 6 நுவரேலியா | 2,01,878 | 1,17585 | 43,371 | 160956 | 766 | 1,61,722 |
| 7. காலி | 5,12,489 | 162934 | 1,81,621 | 344555 | 1010 | 345565 |
| 8. மாத்தறை | 3.99888 | 146705 | 1,42,647 | 28352 | 873 | 290278 |
| 9. அம்பாந்தோட்டை | 2,41,956 | 73,113 | 89,126 | 162239 | 440 | 162679 |
| 10. யாழ்ப்பாணம் | 4,93,705 | 25,315 | 2,65,534 | 290849 | 1775 | 292624 |
| 11. வன்னி | 119093 | 25,986 | 48,968 | 74954 | 447 | 75 401 |
| 12. மட்டக்களப்பு | 172480 | 47,483 | 72,971 | 120453 | 858 | 121311 |
| 13 திகாமதுல்ல (அம்பாறை) | 204268 | .91129 | 62,836 | 153965 | 668 | 154633 |
| 14. திருகோணமலை | 133646 | 39,429 | 51,909 | 91338 | 438 | 91,777 |
| 15 குருநாகல | 717505 | 3,48,935 | 2,08,349 | 5,49,284 | 1,673 | 5,50,9[illegible]7 |
| 16. புத்தளம் | 267675 | 1,09,951 | 71 339 | 181290 | 530 | 181820 |
| 17 அனுராதபுரம் | 278594 | 1,40 460 | 64 618 | 25078 | 747 | 25825 |
| 18 பொலநறுவை | 1276 24 | 51209 | 36,422 | 88486 | 355 | 88131 |
| 19. பதுளை | 280187 | 1,52413 | 64,427 | 216840 | 1152 | 217992 |
| 20. மொனராகலை | 126558 | 58,265 | 31 860 | 90125 | 580 | 90705 |
| 21. இரத்தினபுரி | 402202 | 177079 | 1,28 367 | 35446 | 840 | 306286 |
| 22 கேகாலை | 406548 | 168119 | 1,28,234 | 296353 | 1034 | 2,97,387 |

## மணிவாக்கு

அரசாங்கத்தின் சக்தி கணக்கில் வரும் பூச்சியத்தைப் போன்றது. மக்களின் சக்தி ''ஒன்று'' என்ணைப் போன்றது.

ஒன்றும் பூச்சியமும் இணையும்போது 'பத்து' ஆகிறது; மக்களின் சக்தியும் அரசாங்கத்தின் சக்தியும் சேரும்போது மிகப் பெரிய சக்தி விளைகிறது. இரண்டையும் பிரித்துவிட்டால் மக்களின் சக்தி ''ஒன்று'' ஆகச் சிறுத்துவிடும். அரசாங்கத்தின் மதிப்போ சூன்யமாகிவிடும்.

— விநோபாவே

# நமது நோக்கு

## மூன்றும் உலகின் உயர்கல்வி

கடந்தவாரம் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேருரை நிகழ்த்திய பேராசிரியர் ஜே. ஈ. ஜெயசூரியா நாட்டின் பல்கலைக்கழகங்கள், முற்போக்குச் சக்திகளாக இயங்கவேண்டுமென்றும்; அங்கு கல்வி பயிலும் வாய்ப்புப் பெற்ற மாணவர்கள் தங்கள் பெரும் பொறுப்பை உணர்ந்து இவ்வித வசதி கிடைக்காத மாணவர்களுக்கு உதவும் வகையில் தங்கள் உள்ள விருத்தியை விசாலமாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

எமது நாடு உலக ரீதியில் ஆறுவது வறிய நாடு என்பதை இன்று நாட்டில் மலிந்து வரும் கடும் 'புளுகுப்' பிரசாரத்தில் மறந்துவிடலாகாது.

மூன்றும் உலக நாடுகளில் ஒன்றாகிய இலங்கை, மற்றும் சில ஆசிய ஆபிரிக்க நாடுகளிலும் பார்க்க கல்வியில் விருத்தி பெற்றிருப்பது உண்மை. ஆனால் உயர் கல்வி பல்கலைக் கழகக் கல்வியெல்லாம், உற்பத்தி அபிவிருத்தி—போன்ற அவசிய துறைகளுக்கு உடன் உதவ முடியாத ஏட்டுக் கல்வியே.

பிரிட்டிஷ் மரபைப் பின்பற்றி உயர் பதவிகளுக்குரிய பட்டப்படிப்பை இன்றும் பெரிதாக மதித்து வருகிறோம், மருத்துவம் பொறியியல், சட்டம், கணக்கியல் கலை போன்ற துறைகள், விவசாயம், தொழில் நுட்பத் துறைகளைப் போன்று நேரடி அபிவிருத்திக்கு அவசியமானவை.

ஆபிரிக்க இளம் ஜனாதிபதிகளான யூலியஸ் நயரறே, கென்னத் கவுண்டா போன்ற செல்வாக்குள்ள சிந்தனையாளர்களின் கருத்தை நாம் கவனிப்பது நலம். நாட்டின் அபிவிருத்திக்கு உதவாத பல்கலைக்கழகம் ஒரு வெறும் அலங்கார நிறுவனமென்பதே அவர்களின் கருத்து.

வாழ்க்கை வசதியற்ற மாணவர்களுக்கு அளிக்கும் உயர் கல்வியும் பயிற்சியும் நாட்டை முன்னேறிச் செல்ல உதவ வேண்டும், அதிலேயே மாணவர்களின் வருங்காலம் தங்கியிருக்கிறது. இதற்கு சிரேட்ட பாடசாலை அமைப்பு அத்திவாரமிட வேண்டும்.

இவ்வித அத்தியாவசியமான கல்வியும் பயிற்சியும் எங்கள் பல்கலைக் கழகத்தில் தக்க முறையில் அமையவில்லை.

பல்கலைக் கழகங்கள் அதிகரித்து வந்த போதும் அங்கு நடைபெறும் பாடத்திட்டங்கள் பெரும்பான்மை மாணவர் குபரந்த துறைகளில் அபிவிருத்தித் திட்டப் பயிற்சி அளிப்பதில்லை.

மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பல துறைப் பீடங்கள் உருவாகாத நிலையில், மாணவ அமைதியீனம், பல வன்செயல்களிலும் குழப்பங்களிலும் தோன்றுவது இயற்கையாகும். பல்கலைக்கழக மாணவர்கள் என்றால் நாம் இன்று எதிர்மறையாகவே எண்ணுகின்றோம். விரிவுரைகளைத் திணித்துவிடும் குப்பைக் கூடைகள் அவர்கள் என்றால், பல்கலைக் கழகம் கலக மன்றமாக மாறுவதில் என்ன அதிசயம்?

பேராசிரியர் ஜெயசூரியாவின் அறிவுரை கொழும்பில் நடைபெற்ற குழப்பத்தைக் குறிப்பிடாவிட்டாலும், அதன் அடிப்படைக் காரணத்தைத் தொடாமல் தொட்டுக் காட்டியிருப்பது அவதானிக்கத்தக்கது.

## கன்னிப் பெண்களின் கடும்நோன்பு

முற்காலத்துத் தமிழ்ப் பெண்கள் பரந்த மனப்பான்மை உள்ளவர்கள் அவர்கள் கன்னியாய் இருப்பதற்கு முன், சிறுமிகளாய் வளரும் போதே, தாய்மை உள்ளங் கொண்டவராயிருந்தனர். காய்ந்த சிறு சுள்ளித்தடியை எடுத்து, ஆடைபுனைந்து, மணிமாலை சூட்டித் தம் சொந்தப் பிள்ளை எனக்கொஞ்சி, மார்போடணைத்து மகிழ்ந்து விளையாடும் தாய்மைக் குணத்தை இயல்பாகக் கொண்டிருந்தவர்கள் இளம் வயதிலே தாய்மைக்குணங்கொண்ட கன்னிப் பெண்கள், நாடு செழிக்க நல்ல மழை பெய்யவேண்டுமெனக் கருதினர். தம்முடைய நல்வாழ்வுக்கு நல்ல கணவன் கிடைக்கவேண்டுமெனக் கருதினர். பாவை நோன்பு நோற்றனர். பாவை நோன்பாவது, கௌரியம்மையாரைப் போல, மணலிற் பாவை செய்து, அதனைத் தெய்வம் எனத்திடமாக நம்பி, பாவனை செய்து வழிபடுதலாம். இந்த நோன்புக் காலம் சிவபெருமான் உலகைப் படைக்கத்தொடங்கும் காலமாகும்.

### சத்திகள் ஒன்பதின்மர்

சத்தி சிவபெருமானின் திருவருள். அது ஒன்றாய் முளைத்து உலகளாவி ஒன்பது வகையாய், நவந்தருபேதமாய் நிலவும்போது. இறைவனும் அவளவள் திறம்நோக்கி நின்று நிலவுவர்.

ஒன்பது சத்திகளும் ஒழுங்கு முறையில் மனோன்மணி, சர்வபூதமணி, பலப்பிரதமனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை எனப்பெயர் பெற்றவர்களாவர்.

### உலகப்படைப்பில் சத்திகள்

இறைவன் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன, போகங்களை உண்டாக்கிப் படைக்கும் போது, துணைக் காரணமாய் நிற்பவள் சத்தி. அச்சத்திதானும் முன்சொன்ன ஒன்பது

**க. சி. குலரத்தினம்**

வகைப்பட்டு, முன்னவள் பின்னவளைச் செயற்படுத்துவள் ஈற்றில் எல்லோரும் சேர்ந்து இறைவனைப் போற்றுவர்,

### திருவெம்பாவை கண்ட பாவனை

பதி என்னும் இறைவன், பசுக்களாய ஆன்மாக்களுக்குத் தலைவன், ஆன்மநாயகன், முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள் எனத்தொடங்கும் திருநாவுக்கரசு நாயனாரின் தேவாரத்தில் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே என வரும் தொடர் இங்கே கருதற்பாலது.

ஆன்மநாயகனான இறைவனை அடைதற்குரிய பக்குவம் முதிர்ந்த ஆன்மாக்களையே திருவெம்பாவைப் பாடல்கள் கன்னிப்பெண்களாகக் காட்டுகின்றன. இன்னும் ஆணவமலத்திற் கட்டுண்டிருத்தலையே உறக்கமாகவும், மலத்தின் ஆற்றலை நீக்குதலையே துயில் எழுப்பும்நிலையாகவும் மலபரிபாகம் பெற்ற ஆன்மாக்கள், அந்நிலை கைகூடாத உயிர்களை இறைவனின் திருவருளில் தோய்வதற்கு அழைப்பதாகவும் காட்டுகின்றன

### கண்ட பாவனை கொண்ட முடிவு

திருவெம்பாவை கொண்ட முடிவாவது, பிரபஞ்சத்துக்கு அநுக்கிரகிப்பதற்கு சதாசிவமூர்த்தி திருவருளால் மகேஸ்வர தத்துவத்திலே மனோன்மணி சர்வபூதமனியைப் பிரேரிக்க, அவர் பலப்பிரதமனியைப் பிரேரிப்பர் அவர் கலவிகர்ணியைப் பிரேரிப்பர் அவர் கலவி கல்யாணியைப் பிரேரிப்பர். அவர் காளியைப் பிரேரிப்பர். அவர் ரௌத்திரியைப் பிரேரிப்பர், அவர் சேட்டையைப் பிரேரிப்பர் அவர் வாமையைப்பிரேரிப்பர் இங்ஙனம் நவசக்திகள் பிரேரிக்க அனந்த தேவரால் அசுத்த மாயை காரியப்பட்டு மண்ணீறான பிரபஞ்சங்கள் உண்டாகும்.

—தொடரும்.

## யாழ். ஆஸ்பத்திரியின் விஸ்தரிப்பு

யாழ் பல்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கு அவசிய தேவையானது தரமான மருத்துவம் பயிற்றும் ஆஸ்பத்திரியே! இது இன்று பூரணத்துவம் பெறவில்லை

இலங்கைப்பல்கலைக் கழகத்தின் ஆரம்பமும், யாழ் பல்கலைக் கழக வளாகமும் ஜெனித்த வரலாற்றை அறிந்தவர்கள் இவ்வித விடயம் வாய்த்துவிட்டால் எந்த இடத்தில் இது அமைய வேண்டுமென்பதில் பலவருட வீண்வாதங்கள் நடத்தத் தயங்குவதில்லை.

நல்ல காலம், யாழ் மருத்துவ பீடத்தின் பூரண அமைப்பு பூர்த்திபெற சில வருடங்கள் செல்லுமென்றாலும், இன்றைய யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரியை விஸ்தரித்து ஒரு நாலுமாடிக் கட்டிடத்துக்கு சென்றவாரம் அத்திபாரக் கல் நாட்டப்பட்டது ஒரு உருப்படியான சாதனை.

அதின் விசேடம்; இந்த கட்டிட வேலையின் பொறுப்பை யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை முற்றாக ஏற்றுக் கொண்டதே!

யாழ். மாவட்டசபைத் தலைவர் அத்திபாரக்கல்லை நாட்டியது ஒரு சிறந்த சகுனம்; சபைத்தலைவராக போதிய அதிகாரம், அவசாசம் நிதி உதவி பெற்று வெறும் 'பேப்பரில்' இயங்கும் சபையென்று தாமே கண்டனம் தெரிவித்த தலைவர் இந்த மிகப்பெரிய கைங்கரியத்துக்குத் தோள் கொடுத்திருப்பதால் தங்கள் கட்சி ஏற்றுக்கொண்ட மாவட்டசபை இந்தச் சவாலை ஏற்று அதனைச் செயற்படுத்துவதில் முன்னின்று உழைக்க முற்பட்டிருக்கிறார்.

கட்டிடம், தண்ணீர்வசதி மின்சாரம் முதலிய உபகரணங்கள் முற்றாக செய்து முடிந்தால் 1615 படுக்கை வசதிகள் கிடைக்குமென்று கணிக்கப்படுகிறது.

பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத்திட்டத்தில், வடபகுதி பலதொகுதிகளுக்குரிய நிதியில் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு 250 லட்ச ரூபாவை ஒதுக்கியிருப்பது ஒரு துணிச்சலான சாதனை.

பலவகையாலும் பரிகாசத்துக்கு இலக்கான அபிவிருத்திச்சபையின் திட்டம், யாழ்ப்பாணமாவட்டத்தில் நல்ல பணிபுரிவதற்கு இது ஒரு சிறந்த தொடக்கமெனலாம்.

அபிவிருத்திச்சபையின் பொறுப்புக்கள் பாரியமானவை; இருந்தும் எடுத்த எடுப்பில் பெரியாஸ்பத்திரியில் தொடங்கியிருப்பது மாவட்டம் மட்டுமல்ல நாட்டின் வேறு பல பகுதிகளுக்கும் சிறந்த மருத்துவ சேவை அளிக்க உதவும் திட்டமாகும்.

## முதியோருக்கு உணவு, உடை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை கிழக்கு கிராமோதய சபை முதியோர் ஆண்டை முன்னிட்டு இம் மாதம் 31-ம் திகதி தமது பகுதியிலுள்ள முதியோர்களின் நலன் கருதி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதெனத் தீர்மானித்துள்ளது.

தமது பகுதியிலுள்ள ஆதரவற்ற நிலையில் வாழும் முதியோர்களைத் தெரிவு செய்து அன்றைய தினம் அவர்களுக்கு உணவு, உடைகள் ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்குவது என்றும் இதை இப்பகுதியிலுள்ள லயன்ஸ் கழகம், மற்றும் சனசமூக நிலையங்கள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் நடைமுறைப்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கிராமோதய சபைத்தலைவர் திரு நா. க. தங்கரத்தினம் தெரிவித்தார்,

# மக்கள் கருத்து

## இலவச பாடநூல் வரலாறு திரிப்பு?

கடந்த 10ந் திகதி வெள்ளிக்கிழமை வடமாகாணத்தில் உள்ள பல பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் விநியோகம்செய்யப்பட்டன.

ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு கிடைக்கப்பட்ட பத்துப் புத்தகங்கள் ஏறக்குறைய முன்னூறு ரூபாய் பெறுமதிவாய்ந்தவையாகும்.

என்னுடைய சகோதரி ஒருவர் ஒன்பதாம் வகுப்பிற்குரிய புத்தகங்களைப் பெற்றுள்ளார். அரசாங்கம் ஏழை மாணவர்களுக்கு இப்படியான சேவையை செய்வதையிட்டு மகிழ்ச்சியுடன் ஒரு புத்தகத்தை எடுத்துப்பார்த்தேன். அது சமூகக் கல்விப்புத்தகம், ஒன்பதாம் வகுப்புக்குரியது.

அப் புத்தகம் இலங்கை வாழ் பெரும்பான்மையின [சிங்கள] அறிஞர்களால் ஆக்கப்பட்டு சிறுபான்மையின [தமிழ்] அறிஞர்களால் மொழிபெயர்ப்புச்செய்யப்பட்டுள்ளது. அப் புத்தகத்தில் கடைசி சில பாடங்கள் இலங்கையின் சரித்திரத்தையும், தற்கால வரலாறுகளையும் உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது.

இங்கு நான் என்ன எழுத வருகிறேன் என்றால், நான் 1964, 65, 66-ம் ஆண்டுகளில் படித்த இலங்கையின் வரலாற்றுக்கும் தற்போது இலங்கை அரசாங்கத்தால் இலவசமாக விநியோகம் செய்யப்பட்ட 9ம் வகுப்பு சமூகக் கல்வி புத்தக வரலாற்றுக்கும் மிகப் பெரிய அளவில் வேறுபாடு காணப்படுகின்றன.

நான் பாடசாலையில் கல்வி கற்றபின் பல நூல்நிலையங்களில் இலங்கை வரலாறுகளைப் பற்றி மிக ஆவலுடன் நிறைய வாசித்தறிந்தும், கேட்டு அறிந்தும் இருக்கிறேன். ஆனால், தற்போதைய அரசாங்க பாடப் புத்தகத்தில் முற்றும் மாறாக எழுதியிருக்கிறபடியால், எமது எதிர்கால தமிழ் மாணவர்கள், மிகவும் சிக்கலான ஒரு சூழ்நிலையில் வரலாறுகளைப் படிப்பதால் ஏற்படும் சிக்கல்களை நினைத்து வேதனையடைகிறேன்.

இதனால்தான் என்னவோ பழம்பெரும் வரலாற்றுப் புத்தகங்களைக்கொண்ட யாழ் நூல்நிலையம் நெருப்பினால் நீறாக்கப்பட்டது என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

அரசாங்கம் இலவசப்புத்தகங்கள் கொடுக்கும் நோக்கமே இப்படியான சில வரலாறுகளை புனைந்து தமிழ்மக்கள் மனதை நிலைகுழம்பச் செய்வதற்கா? என நினைக்க வேண்டியுள்ளது.

சி. தேவராஜா

அளவெட்டி.

* * *

## மரங்களைஅழித்தல் முறையா?

பழம்புகழ் வாய்த்த பதியாம் எங்கள் நாயன்மார்கட்டின் கண்ணே திகழும் சிறந்த தடாகம் உளது. இக் குளத்தின் பெயர் ''நாயன்மார்குளம்'' இக் குளத்தின் ஓரங்களில் கனகரத்தினம் வீதி, நாயன்மார் வீதி என இரு வீதிகள் அமைந்துள்ளன. இவ் வீதியருகாக போக்குவரவுசெய்யும் பொதுமக்களுக்கு நிழல் தருவனவாக மூன்று மரங்கள் இருந்தன. இவற்றில் ஒன்று அண்மையிலே யாழ் மாநகர சபையினரால் தெருக் குப்பை கூழங்களைக் கொட்டி நெருப்பு மூட்டிவிட்டதனால் அழிந்துவிட்டது. மரங்களை வளர்க்க வேண்டிய இக்காலத்தில் வளர்த்த, வளரும் மரங்களை அழிப்பது எவ்வளவு அநீதி. இனியாவது இம் மரங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? மக்களுக்குப் பகல் வேளையில் இளைப்பாற உதவும் இம் மரங்களை அழித்தொழிப்பது பெரும் தீங்காகும். இது பற்றி அங்குள்ள விநாயகர் ஆலயச்சூழலிலுள்ள அன்பர்களும் கவலையடைந்துள்ளனர். மரங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க மாநகரசபை முன்வரவேண்டும்.

கா. இரகுநாதன்

நாயன்மார்கட்டு.

# மன்னார் செய்திகள்

எஸ். தர்மகுலசிங்கம்

## ரூபா 1 லட்சம் ஒதுக்கீடு

மன்னார் மாவட்டத்தில் 1983ஆம் ஆண்டு குடும்ப நல அபிவிருத்திகளை மேற்கொள்ளவென ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

இவ்வாறு மன்னார் மாவட்ட குடும்பநலச் சங்கத்தலைவர் டாக்டர் றுபேர்ட் குரூஸ் தெரிவித்தார்.

## தொடர்ந்து பெய்யும் மழை

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் கட்டுக்கரைகுளம் முற்றாக நீர் நிறைந்துள்ளது.

இதனால் அருவி ஆற்றிலிருந்து கட்டுக்கரை குளத்திற்கு வரும் நீர் தடைசெய்யப்பட்டுள்ளது. கட்டுக்கரை குளத்தின் மொத்த நீர் மட்டம் 11 அடியாகும்.

மன்னார் மாவட்டத்திலுள்ள சிறு குளங்கள் யாவும் நிறைந்திருப்பதால் கட்டுக்கரை குளத்திலிருந்து விவசாயச் செய்கைக்கு நீர் திறந்து விடப்படவில்லை.

## திருமலை ஒலிம்பிக்வெற்றி

திருகோணமலை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்திற்கும் கழகத்திற்கு மன்னார் கிறீன்லண்ட் விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் திருகோணமலை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

மன்னார் புனித செபஸ்தியார் ஆண்கள் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ் உதைபந்தாட்டப்போட்டியில் திருகோணமலை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் 3:1 கோல்களால் மன்னார் கிறீன்ஸ்லண்ட் விளையாட்டுக்கழகத்தை தோற்கடித்தது.

## சென்யோசெப் சாம்பியன்

மன்னார் - பனங்கட்டிகொட்டு சென்யோசெப் விளையாட்டுக்கழகத்திற்கும் திருகோணமலை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் பனங்கொட்டு சென்யோசெப் விளையாட்டுக் கழகம் சாம்பியனாகியது

இவ் உதைபந்தாட்டப் போட்டிக்குப் பொறுப்பாக மன்னார் விளையாட்டு அதிகாரி திரு எம் ஜீவரட்ணம் கடமையாற்றினார்

## இடமாற்றங்கள்

அடம்பன் பங்குத் தந்தையாகக் கடமையாற்றிய அருட்திரு சூசைப்பிள்ளை ஆட்காட்டி வெளி புதிய பங்கின் குரவராக இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அடம்பன் பங்குத்தந்தையாக பேசாலைப் பங்குத் தந்தையாகக் கடமையாற்றிய அருட்திரு தேவசகாயம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

செட்டிக்குளம் பங்குத்தந்தையாகக் கடமையாற்றிய அருட்திரு. சூசைநாயகம் பேசாலை பங்குத்தந்தையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

தாழ்வுபாடு. பள்ளிமுனை பங்குகளின் தந்தையாக அருட்திரு. பொன்னையா நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ் மறை மாவட்டத்தைச்சேர்ந்த அருட்திரு ஞானப்பிரகாசம் செட்டிக்குளம் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் பங்கின் புதியஉதவியாளராக அருட்திரு எமிலியானுஸ்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

## நியமனம்

மன்னார் மாவட்ட குடும்ப நல திட்ட மிடல் அதிகாரியாக திரு எஸ். வரதராஜன் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனம் குடும்பநலசங்கத்தின் பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ளது.

## உண்ணாவிரதம்

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மதகுருமாரையும், விரிவுரையாளர்களையும், தமிழ் இளைஞர்களையும் விடுதலைசெய்யுமாறு கோரி முள்ளிக்குளம் புனிதபரலோகமாதா ஆலயத்திலும், சிலாவத்துறை புனித சவேரியார் ஆலயமுன்றலிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை உண்ணாவிரதம் நடைபெற்றது

திருப்பலிப்பூசையுடன் ஆரம்பமாகிய இவ்வுண்ணாவிரதத்தில் சிங்கள மக்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

# அனுதாபம்

(பண்டத்தரிப்பு)

காலையடி மறுமலர்ச்சி மன்றம் யாழ். பல்கலைக்கழகக்கலைத் துறைத் தலைவரும் இலக்கிய விற்பனருமான கலாநிதி க கைலாசபதியின் திடீர் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுப்பிவைத்துள்ளது. அவரது மறைவு தமிழ் இலக்கியத் துறைக்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பு என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய அம்புலன்ஸ் நெடுந்தீவில் நிறுத்த வேண்டும்

(நெடுந்தீவு)

சுகாதார அமைச்சினால் தீவுப்பகுதிக்கு வழங்கப்படவிருக்கும் புதிய அம்புலன்ஸ் மோட்டார்ப் படகை நெடுந்தீவில் நங்கூரமிடவேண்டுமெனவும் சேவையை நெடுந்தீவில் இருந்தே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் திரு. சி, வ. சங்கரப்பிள்ளை யாழ் சுகாதார சேவை அதிகாரி தீவுப்பகுதி எம். பி யாழ். அபிவிருத்தி சபைத் தலைவர் ஆகியோரைக் கேட்டுள்ளார். நெடுந்தீவு முன்னேற்றக்கழகமும் இது தொடர்பாக சுகாதார சேவை அத்தியட்சருடன் தொடர்பு கொண்டுள்ளது. [அ]

## நத்தார் செய்தி

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள எமது கத்தோலிக்க குருமாரும், விரிவுரையாளர்களும், தமிழ் இளைஞர்களும் நீதியின் சமத்துவத்தில் உரிமை பெற இந் நத்தார் தினம் வழிகாட்டும் நட்சத்திரமாக அமையவேண்டும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு. பி. எம். செபமாலை தமது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

## எம். பி. செய்தி

ஒடுக்கப்பட்ட தமிழினம் விடுதலை பெறவும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மதகுருமார், விரிவுரையாளர்கள், இளைஞர்கள் விடுதலைபெறவும் இந் நத்தார் திருநாளில் பிரார்த்திப்போம்.

இவ்வாறு மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் தமது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

# சிறுமி நஞ்சிடம் தஞ்சம்

[கிளிநொச்சி நிருபர்]

இன்றுதான் எனக்கு கடைசிச் சாப்பாடும் உரிமைச் சாப்பாடு என்று கூறிய 15 வயது சிறுமி நஞ்சருந்தி மரணமானார். கிளிநொச்சி செல்வபுரத்தைச் சேர்ந்த விஜயராணி குலவீரசிங்கம் என்பவரே மரணமானவராவார்

இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு மூ. யோகலிங்கம் மேற்கொண்டார்.

சாட்சியளை கிளிநொச்சி பொலிசார் ஆஜர் செய்தனர்.

மரணமான விஜயராணியின் தாய் கு நாகலட்சுமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவதினம் காலையில் மகள் எவ்வித வேலையும் செய்யாது சோம்பலாக இருந்தார். எங்களது சமைத்துக்கு போய் வேலை செய்யுமாறும் நான் கூறியதுடன் சும்மா ஒருவித வேலையும் செய்யாது இருந்தால் எவ்வாறு சாப்பிடுவதென்றும் கூறினேன். சிறிது நேரத்தில் மகள் கிருமிநாசினியை அருந்திவிட்டதுடன் இதுதான் எனது கடைசிச் சாப்பாடும் உரிமைச்சாப்பாடும் என்றும் கூறி மரணமானார்.

தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

## புலோலிப் பகுதியில்

# நெல்வயல்களில் இலை சுருட்டிநோய் ஆபத்து!

(புலோலி)

புலோலி விவசாயப்போதனாசிரியர் பகுதி நெல்வயல்களில் இலைச்சுருட்டி நோய் வேகமாகப் பரவி வருவதனால் நெற்பயிர்கள் நாசமடையக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றனவாம்.

இந்நெற்பயிர் நோய் பரவி வருவதைத் தடை செய்வதற்கான நடவடிக்கைகளை புலோலி போதனாசிரியர் திரு ஆர். கிருஷ்ணபிள்ளை துரிதமாகமேற்கொண்டு வருகின்றார்.

விவசாயப் போதனாசிரியர் விவசாயிகளுக்கு வழங்கியுள்ள ஆலோசனையில் விவசாயிகள் தமது நெல் வயலுக்குக் கிரமமாகச் சென்று நெற்பயிரை நன்கு அவதானித்து வரவேண்டும் என்றும் நெற்பயிரில் இலைசுருட்டி நோய் காணப்படடால் 425—550 மில்லிமீற்றர் குளோரேறுபைறிபொஸ் 25 வீதம் செறிகுழப்பு அல்லது மொனோகுரோற்றோபொஸ் 60 வீதம் செறிசுழப்பை 270 லீற்றர் நீருடன் கலந்து ஒரு ஏக்கருக்குத் தெளிக்கவேண்டும். இல்லையேல் 550—850 மில்லி லீற்றர் பெந்தியன் 50 வீதம் செறிகுழப்பை 270 லீற்றர் நீருடன கலந்து தெளிக்கவேண்டும் என்றும் அறிவித்துள்ளார். (க)

# "கிறிஸ்மஸ் தினத்தை ஆடம்பரமற்றதாக கொண்டாடுங்கள்!"

(யாழ்ப்பாணம்)

"கிறீஸ்துவின் சாயலாக எம்மத்தியில் நிகழ்ந்த எமது மதிப்புக்குரிய குருமார் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நூறுபதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் இன்று பயங்கரவாததடைச் சட்டத்தின் பிடியில் சிக்குண்டிருக்கும்போது உள்ளாக்கப்பட்டிருக்கும் போது நாம் நத்தார் தினத்தை விமரிசையாக கொண்டாடுவது முறையல்ல. கிறீத்தவ பண்பாட்டிற்கு அழகல்ல ஆதலால் இப்புனித தினத்தை நம் எல்லோரும் அமைதியான முறையில் வீட்டில் இருந்தவாறே தருமங்களில் ஈடுபடுமாறு அன்புடன் வேண்டுகிறோம் எமது உள்ளத்தில் நிறைந்துள்ள துயரத்தை பிறமதத்தினருக்கும் குறிப்பாக உலகின் கண்ணோட்டத்துக்கும் கொண்டு வருவோம்" என்று கிறீஸ்தவ தமிழ்ப் பண்பாட்டு பேரவை விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

# தஞ்சை பல்கலைக்கழகத்தில் செப்பேடுகள், கல்வெட்டு

சென்னை, டிச 22

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் வை சுப்பிரமணியம் மராத்தியர் காலச் செப்பேடு ஒன்றை திரு செல்வம் ராவுத்த மிண்ட நயினார் அன்பளிப்பாக வழங்கினார்.

அச்செப்பேடு இன்று தமிழ்நாட்டில் கிடைக்கும் மராத்தியச் செப்பேடுகளில் மிகத் தொன்மையானது. கி. பி. 1701 ஆம் ஆண்டில் ஆட்சி புரிந்த இரண்டாம் மராத்திய மன்னன் சகசி காலத்தைச் சேர்ந்தது. ராஜாதிராஜ வளநாடு, வழுதலம்பட்டுச்சாவடி போன்ற தொன்மையான பிரிவுகள் மராத்தியர் காலத்திலும் தொடர்ந்து இருந்தது இதன் மூலம் தெரிகிறது. மராத்திய மன்னர்களால் கீகரிழிச் சீமை பாளையக்காரர் என்று இவர்கள் அங்கீகாரம் பெற்றிருந்தனர் என்பது தெரிகிறது. இச்செப்பேட்டில் 'காடுவெட்டி', 'தில்லை புதுக்கரை' எனவரும் தொடர்களால் அன்று காடு அழித்து நாடாக்கியமையும், புதுக்கால்வாய்கள் வெட்டப்பட்டதும் அறியவருகிறது

சரந்தையிலிருந்து இரண்டு துண்டுக்கல்வெட்டுக்கள் தஞ்சாவூர் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஒன்றில் 'காடவன்' என்ற தலைவனைப் புகழும் கட்டளைக் கலித்துறை பாடல் காணப்படுகிறது. அவன் சோழநாட்டில் வாழ்ந்த பல்லவ குலத்தின் பிற்கால வாரிசாக இருக்கலாம்.

மற்றொரு கல்வெட்டு மதுரைநாயக்கர், தஞ்சை நாயக்கர் வரலாற்றுக்கு மிக இன்றியமையாதது.

நத்தார் புதுவருட விற்பனை! விரையுங்கள்!!

யாழ் நகரில் நவீன தளபாடங்கள் விற்பனையில்
சாதனை நிலைநாட்டியவர்கள் -

ஸ்ரான்லி
பேணிசிங் பலஸ்

அவர்களின்
நேர்த்தியான, நிகரற்ற தளபாடங்கள்
உங்கள் இல்லங்களுக்கு மேலும்
மெருகூட்டும்



10வது ஆண்டு நிறைவையொட்டி
1-12-82 முதல் 31-12-82 வரை 10% கழிவுடன்
☆ மெத்தைகள் ☆ நவீன தளபாடங்கள்
பெற்றுக்கொள்ளலாம்
ஸ்ரான்லி பேணிச்சர் காட்சியறை
5, 7, ஸ்ரான்லி வீதி, யாழ் நகர். போன்: 23763

குறிப்பு: எமது ஸ்தாபனத்திற்கு யாழ் நகரில்
வேறு கிளைகள் இல்லவே இல்லை

# அத்தனகலைக்கு விமானப்படை!

(கொழும்பு)

அத்தனகலையில் தலைதூக்கிய அசம்பாவித சம்பவங்களை அடக்க விமானப்படையினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

அத்தனகலைத் தொகுதியில் வன்செயல்கள் இடம்பெறுவதாகவும், சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் தீர்ப்புக்குப் பின்னர் நிலைமை மேலும் மோசமாகலாம் என்றும் திருமதி சிறிமாவோ ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருந்தது தெரிந்ததே.

இங்கு நிலைமை மேலும் மோசமாவதைத் தவிர்க்கவே விமானப் படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## ஒரே பார்வையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 31,591 |

### மானிப்பாய் தொகுதி

| | |
|---|---|
| மொத்தம் | 48,930 |
| பானை | 25,505 |
| விளக்கு | 2,333 |
| கழிவு | 224 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 28 062 |

### கோப்பாய் தொகுதி

| | |
|---|---|
| மொத்தம் | 49 577 |
| பானை | 29 347 |
| விளக்கு | 1,796 |
| கழிவு | 2,6 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 31,359 |

### உடுப்பிட்டித் தொகுதி

| | |
|---|---|
| மொத்தம் | 43 991 |
| பானை | 25,310 |
| விளக்கு | 1103 |
| கழிவு | 210 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 26,623 |

### பருத்தித்துறைதொகுதி

| | |
|---|---|
| மொத்தம் | 34 859 |
| பானை | 18,429 |
| விளக்கு | 1374 |
| கழிவு | 48 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 19,851 |

### சாவகச்சேரித் தொகுதி

| | |
|---|---|
| மொத்தம் | 26,401 |
| பானை | 23,951 |
| விளக்கு | 2,294 |
| கழிவு | 156 |
| அளிக்கப்பட்டமொத்த வாக்குகள் | 26401 |

### நல்லூரத் தொகுதி

| | |
|---|---|
| மொத்தம் | 49,233 |
| பானை | 27,800 |
| விளக்கு | 2,46 |
| கழிவு | 114 |
| அளிக்கப்பட்டமொத்த வாக்குகள் | 30,383 |

### யாழ்ப்பாணத் தொகுதி

| | |
|---|---|
| மொத்தம் | 42,296 |
| விளக்கு | 3,479 |
| பானை | 21,503 |
| கழிவு | 112 |
| அளிக்கப்பட்ட மொத்தவாக்குகள் | 25,094 |

யாழ் மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களித்தோர் விபரம்:

| | |
|---|---|
| விளக்கு | 1184 |
| பானை | 3619 |
| கழிவு | 43 |

### கிளிநொச்சி தொகுதி

| | |
|---|---|
| மொத்தம் | 39,773 |
| விளக்கு | ,257 |
| பானை | 15,143 |
| கழிவு | 139 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 18,539 |

(மா)

# தொகுதி ரீதியான முடிவுகள்

(கொழும்பு)

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப் பெற்ற தொகுதி ரீதியான பிரிக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:

| தொகுதி | விளக்கு | பானை |
|---|---|---|
| மட்டக்களப்பு தொகுதி(1) | 14,238 | 7,798 |
| மட்டக்களப்பு தொகுதி (2) | 7,437 | 23,346 |
| பலப்பிட்டிய | 8,216 | 14,249 |
| கண்டி | 11,700 | 7,306 |
| குண்டசாலை | 14,344 | 14,246 |
| கேகாலை | 15,814 | 14,321 |
| தங்காலை | 19,022 | 22,091 |
| காலி | 12,566 | 15,149 |
| கலவான | 13,062 | 11,126 |
| தெவிநுவர | 19,223 | 21,922 |
| பெலியத்த | 16,778 | 21,2 2 |
| சேருவல | 14,825 | 14,543 |
| கொட்டே | 17,1 2 | 18,574 |
| திசமகரகம | 21,373 | 22,773 |
| மஹர | 20,773 | 21,626 |
| முல்கிரிகல | 13,720 | 22,553 |
| அத்தனகல | 35,747 | 17,442 |
| அம்பலாங்கொட | 14,063 | 16,977 |
| ரத்சம | 16,949 | 20,990 |
| பேருவளை | 20,200 | 21,500 |
| ஹபரதுவ | 86,087 | 24,700 |
| களுந்துறை | 19,800 | 23,857 |
| பாணந்துறை | 19,459 | 25,569 |
| மத்துகம | 18,592 | 21,342 |
| அகலவத்த | 18,870 | 20,897 |
| சம்புறுப்பிட்டிய | 16,998 | 20,859 |
| கொழும்பு மத்தி | 51,708 | 34,903 |
| ஹக்மன | 20,193 | 22,157 |
| மாத்தறை | 18,091 | 19,797 |
| மன்னார் | 10,795 | 15,445 |
| பிங்கிரிய | 21,459 | 16,325 |
| வவுனியா | 9,916 | 18,669 |
| திருகோணமலை | 9,609 | 20,643 |
| கல்குடா | 13,065 | 18,299 |
| பட்டிருப்பு | 12,444 | 23,516 |

## தேர்தல் ஏஜண்ட்மரணம்:

# பூகோடைப் பகுதிக்கு அதிரடிப்படை விரைவு

(கொழும்பு)

பூகொடைப்பகுதிக்கு அதிரடிப்படையினர் (கொண்டோ) விரைந்துள்ளனர்.

வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லும் வழியில் தாக்கப்பட்டார் என்று கூறப்படும் தேர்தல் ஏஜண்ட் ஒருவர் வாக்களிப்பு நிலையத்துக்குச்சென்று பின் அங்கு மயங்கிவிழுந்து மரணமானார்,

வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லும் வழியில் இவர்காரில் வந்த சிலரினால் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன் எதிரொலியாக பூகொடை பகுதியில் தலைதூக்கிய அசம்பாவிதங்களை அடக்க அதிரடிப்படை அனுப்பப்பட்டுள்ளது. (இ)

## ☆ யாழ். மாவட்டத்தில்

# முதல்முடிவு: பருத்தித்துறை

# கடைசி முடிவு: காங்கேசன்துறை

ஏ வி மாணிக்கம்

யாழ். மாவட்டத்திலுள்ள பதினொரு தொகுதிகளிலுமிருந்து நேற்று மாலை 6-30 மணி தொடக்கம் வாக்குப் பெட்டிகள், பொலிஸ்-இராணுவ பாதுகாப்புடன் வந்து சேரத் தொடங்கின.

யாழ் செயலகத்தின் மூன்று வாசல் புறங்களாலும், தேர்தல் காரியாலய வாசலினாலும் வாக்குப் பெட்டிகள் வரவேற்கப்பட்டன.

நான்கு வாசல்களிலும் பொலிசார் காவல்நின்று வாக்குப் பெட்டிகளைப் பதிவு செய்தனர்.

மானிப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய தொகுதிகளிலிருந்து முறையே வாக்குப் பெட்டிகள் வாகனங்களில் பாதுகாப்பாக வரத் தொடங்கின.

இரவு 8 மணி தொடக்கம் வாக்குகள் எண்ணத்தொடங்கிய போதிலும், இரணைதீவிலிருந்து வாக்குப்பெட்டிகள் 9-30 க்கு வந்து சேர்ந்ததால் கிளிநொச்சித் தொகுதியை இரவு 9-30 க்கு எண்ணத் தொடங்கினர்.

பதினொரு தொகுதிகளின் வாக்குப்பெட்டிகள் பதினொரு இடங்களில் வைத்து எண்ணப்பட்டன.

ஒவ்வொரு தொகுதிவாக்குப் பெட்டிகள் எண்ணும் பகுதிகளில் தலா 50 உத்தியோகத்தர்கள் கடமையாற்றினர்.

உதவி, மேலதிக அரசாங்க அதிபர்கள் தலைமையில் ஒவ்வொரு தொகுதி வாக்குகளும் எண்ணப்பட்டன. வாக்கு எண்ணப்பட்டு முதல் முடிவுகள் வந்த யாழ் மாவட்ட தொகுதி பருத்தித்துறை; கடைசியாக வெளிவந்த முடிவுக்குரிய தொகுதி காங்கேசன்துறை.

### அதிபரும் ஆணையாளரும்

யாழ்.மாவட்டசெயலாளரும் யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா, யாழ். மாவட்டஉதவி தேர்தல்ஆணையாளர் திரு. எஸ். ஜெயபதியும் வாக்குகள் எண்ணப்படும் பகுதிகளுக்கு அடிக்கடி சென்று பார்வையிட்டனர்.

### யாழ். எம். பியும் கோப்பாய் எம். பியும்

யாழ். எம். பி திரு. வெ. யோகேஸ்வரனும், கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரமும் யாழ். மாவட்ட தொகுதிகளின் வாக்குகளின் எண்ணிக்கை முடியும் வரை நின்று நிலைமைகளை அவதானித்தனர்.

### இடதுசாரிக் கட்சிகள்

சிறீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, சமசமாஜக் கட்சிகளின் தலைவர்கள், தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமுகர்களும் காணப்பட்டனர்.


நத்தார் - புத்தாண்டை - முன்னிட்டு

**விசேட கழிவு! விரையுங்கள்!!**

சகல மரத்தளபாடங்கள் - "ஆர்பிக்கோ" மெத்தைகள் - குஷன் - செற்றிகள். இன்னும் பல.

**டில்கா பேணிச்சர் பலெஸ்**

234 - 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24186

வடமாகாண மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்....

உங்கள் பிரயாணத்தை இதமான சொகுசுடன் அனுபவிக்க....

உலக புகழ்பெற்ற

**வெஸ்பா (VESPA) ஸ்கூட்டர்கள்**

☆ புத்தாண்டை மகிழ்ச்சியுடன் அனுபவிக்க உங்கள் மனங்கவர் 'வெஸ்பா' ஸ்கூட்டரை பெற்றுக்கொள்ள விரையுங்கள்....

☆ உங்கள் தேவைக்கு முன்கூட்டியே பதிவுசெய்யுங்கள்;

**சி.சின்னத்துரை அன் கொம்பனி**

25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி : 23357


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q. B. 100236/81 Eelanaadu - P. O. Box; 49. Telegram: Eelanaadu, Telephone; 22389 — 24126,